Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 4.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு சித்திரைத் திங்கள் 1931 ஞு ஏப்ரல்மீ | இதழ் ௪

உள்ளுறை 9—MAY 1931 பக்கம்

திருவிழாவின் அர்த்தம் ... ...
சமரசம் ... ...
தென்புலத்தார் பிதிர்தேவர்களா அல்லது மக்கட் பகுதியினரா ? ... ... ... ௧௧௨
கண்டாதித்தர் ... ... ... ௧௧௩
வீரு மவெண்பா விளக்கக் குறிப்பு ... ... ௧௧௫
தேவாரம் ... ... ... ... ௧௧அ

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலககாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணு 3.

# சமாஜ அறிக்கைகள்

1. இவ்விதழில் வெளிவந்துள்ள "திருவிழாவின் அர்த்தம்" என்ற கட்டுரை துண்டுப் பிரசுரமாகச் சமாஜத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. பிரதி ஒன்றின் விலை மூன்று பை; நூறு பிரதிகளின் விலை ரூ. 1-4-0. தபாற் கூலி வேறு. திருவொற்றியூரில் நடைபெறும் மகிழடி சேவையைப் பற்றிய விளக்கமும், மயிலாப்பூரில் நடைபெறும் அறுபத்துமூவர் உத்ஸவம், அங்கம் பூம்பாவை உத்ஸவம் இவைகளைப் பற்றிய விளக்கமும் சமாஜ உதவித்தலைவர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., அவர்களால் எழுதப்பெற்றுத் துண்டுப் பிரசுரங்களாக வெளிவந்துள்ளன. அவைகளும் தனித்தனியே மேற்கண்ட விகிதப்படி கிடைக்கும். இம்மூன்று பிரசுரங்களில் ஐந்நூறு பிரதிகட்கு மேல் திருவொற்றியூர் திருமயிலாப்பூர் திருவிழாக்களில் விற்று முதல் செய்யப்பட்டன.

2. திருமயிலாப்பூரில் நடந்த திருவிழாவில் மூன்றாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை நாடோறும் சமயப் பிரசாரம் சமாஜத்தினரால் செய்யப்பட்டது. மூன்றாம்நாள் காலை அதிகாரநந்தி சேவையில் திருமுலைப்பால் உத்ஸவத்தில் திருவாளர்கள் திரு. வி. உலகநாத முதலியாரும், தே. உலகநாத நாயகரும் திருமுலைப்பால் உத்ஸவ ஐதீகத்தை விளக்கினார்கள். நான்காம் நாள் மாலை திரு. கண்ணபிரான்வேள், திரு. டி. சம்பந்த முதலியார் ஆகிய இருவரும் சைவ சமயத்தின் உட்கருத்து, பக்தி முதலியவைகளைப்பற்றிப் பேசினார்கள். ஐந்தாம் திருவிழாவன்று மாலை திருவாளர்கள் கண்ணபிரான் வேள், சைவ உணவு, திருவிழாவின் உட்கருத்து முதலியன பற்றிப் பேசினார். ஆறாந் திருவிழாவன்று மாலை திரு. பா. கந்தநரசிம்ஹம், B.A , B.L. அவர்கள் திருக்கோயில் வழிபாடு, கடவுள் பக்தி வலையிற் படுதல் முதலிய பொருள்களை விளக்கினார்கள். ஏழாந் திருவிழாவன்று மாலை திருவாளர்கள் திரு. வி. உலகநாத முதலியார், தே. உலகநாத நாயகர், வேள். துரைக்கண் என்மனோர் தேர்த் திருவிழாவின் உட்கருத்து முதலியவைகளை நன்றாக விவரித்தார்கள். எட்டாம் திருவிழாவன்று திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், அருணகிரி பாகவதர் ஆகிய இவர்கள் முறையே அங்கம்பூம்பாவை சரித்திரம், அறுபத்து மூன்று நாயன்மார், அருணகிரிநாதர் சரிதை என்பன பற்றிப் பேசினார்கள்.

3. அறுபத்துமூவர் சேவையன்று சமாஜ அங்கத்தினருள் ஒருவராகிய திரு. ச. நமசிவாய முதலியார் அவர்கள் குழந்தைகட்குப் பசும்பால், சிற்றுண்டிகள் வழங்கும் தருமத்தை மிகச் சிறப்பாக நடத்தினார். திருவிழாவில் பத்து நாட்களும் பஞ்சமூர்த்திகளின் பின்னர் தேவார பாராயணம் செய்துவந்த ஓதுவார் மூர்த்திகளனைவர்க்கும் பசும் பாலும், தேர்வடம் பிடித்த தொண்டர்கட்கு நீர்மோரும் சமாஜத்தினர் ஒருவரால் வழங்கப்பட்டன.

4. சமாஜத்தலைவர் - சைவத் திருவாளர் - பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் கோடை விடுமுறையில் சென்னைக்கு வந்து ஒரு மாதம் தங்கியிருந்து, சிவஞானபோத வகுப்பைத் தொடங்கி, தினந்தோறும் நடத்தி முடித்துவிட்டு வைகாசி மூலத்துக்கு ஆச்சாபுரம் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தங்கள் தொழில் முறையில் நேர்ந்துள்ள ஓர் அவசரமான சந்தர்ப்பத்தினால் தற்போது வர இயலாமையையும் அச்சந்தர்ப்பத்தில் செய்யவேண்டிய வேலைகளை முடித்துவிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள். ஆகவே வகுப்பு தொடங்கும் செய்தி பின்னர் அறிவிக்கப்படும்.

5. கோடை விடுமுறைக்கு வெளியூர் செல்வோர் தங்கள் விடுமுறை விலாசங்களை உடனே தெரிவிக்கவும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

9 - M.. 1931

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு சித்திரைத் திங்கள்<br>1931 ௵ ஏப்ரல் ௴ | இதழ் ௪ |
|---|---|---|

## திருவிழாவின் அர்த்தம்

[பத்திராசிரியர்]

நமது தமிழ் நாட்டில் உத்தராயணத்தில், அதிலும் சிறப்பாகப் பங்குனி, சித்திரை மாதங்களில் நூற்றுக்கணக்கான சிவாலயங்களில் பிரஹ்மோத்ஸவம் அல்லது பெரிய திருவிழா என்று பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் இரண்டு வேளையும் மிகச் சிறப்பாகப் பூசை புரிந்து சிவபெருமானையும் பெருமாட்டியையும் மற்றும் ஆலயத்திலுள்ள மூர்த்திகளையும் பல வாகனங்களின் மேல் எழுந்தருளிவித்துத் திருவிழாச் செய்தலும், கொடியேற்றம் கொடியிறக்கம் புரிதலும், கல்யாணம் முதலிய பல சடங்குகள் நிகழ்த்தலும் பழைய வழக்கமாயிருக்கின்றன. இதைப் பார்ப்பதற்கு உள்ளூரிலும் வெளியூர்களிலு முள்ளவர்கள் ஆயிரக்கணக்காக வந்து இன்பம் அடைகிறார்கள். ஆனால் வருகிறவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு ஏன் ஒவ்வொரு திருவிழாவில் ஒவ்வொரு குறிப்பிட்ட வாகனம் வரவேண்டும், குறிப்பிட்ட சடங்குகள் நடக்கவேண்டும் என்பவற்றிற்கு யாதொரு காரணமும் தெரிகிறதில்லை. அந்தப்பெருங் குறையை நீக்கி மக்களுக்கு இவ்விஷயங்களை மிகச் சுருக்கமாகத் தெரிவிப்பதற்காகவே இந்தக் கட்டுரை எழுதப்பட்டது.

சிவாலயத்தின் அமைப்பு, சிவாலயத்திலுள்ள மூர்த்திகளின் திருவுருவங்கள், அம்மூர்த்திகட்கு நடக்கும் பூஜைகள், திருவிழாக்கள் ஆகிய இவைகளெல்லாம் தத்துவஅர்த்தம் நிறைந்து கிடக்கின்ற விஷயங்கள். அந்த அர்த்தத்தை யெல்லாம் நன்றாய்த் தெரிந்து கொண்டால்தான் நாம் கோயிலுக்குப்

போய் அம்மூர்த்திகளைக் கண்டு வணங்குவதால் வரும் பயனை முழுவதும் அடைவோம். திருக்கோயிலின் அமைப்பு, கோயிலில் உள்ள மூர்த்திகளின் உருவ விளக்கம் இவைகளைப் பற்றி இந்தக் கட்டுரையில் விவரிக்க இடம் இல்லாமையால், திருவிழாவைப் பற்றி மட்டும் ஆராய்வோம்.

திருவிழா எத்தனை நாள் நடக்க வேண்டும், எந்தெந்த நாளில் எந்தெந்த சடங்குகள் நடக்கவேண்டும், எந்தெந்த மூர்த்திகள் எந்தெந்த வாகனங்களின் மேல் எந்தெந்த நாழிகைக்குப் புறப்படவேண்டும் என்ற விவரங்கள் எல்லாம் ஆகமங்களில் மிக விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. நமது தமிழ் நாட்டிலுள்ள எல்லாக்கோயில்களிலும் ஒரே ஆகமத்தின்படி காரியங்களை நடத்தினால் எல்லாம் ஒரே மாதிரியாக வித்தியாசமில்லாமல்இருக்கும். ஆனால் ஊருக்கு ஊர், கோயிலுக்குக் கோயில் வேறுவேறு ஆகமத்தின்படி நடத்துவதால் வித்தியாசங்கள் பல இருக்கின்றன. ஆனால் பெரும்பான்மையான கோயில்களில் காரணாகமம், காமிகாகமம், வாதுளாகமம் முதலிய சிலவற்றையே பின்பற்றுவதால்தான்ஏறக்குறைய பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

எத்தனை நாட்கள் திருவிழா நடத்த வேண்டும் என்பதைப்பற்றியே ஆகமங்கள் பலவாறாகக் கூறுகின்றன. ஒருநாள் முதல் இருபத்தொரு நாள் வரை திருவிழா நடைபெறலாம். இப்போது பற்பல சிவாலயங்களில் கொடியேறியிறங்கும் வரை பத்துநாளும், கொடியேறுவதற்கு முன் விநாயகர் உத்ஸவம் ஒருநாளும், கொடியிறங்கிய பிறகு பந்தம்பறி உத்ஸவம் ஒருநாளும் ஆகப் புன்னிரண்டு நாள் திருவிழா நடப்பதுதான் இத்தொண்டை நாட்டிலும் வேறு தெற்கே பல விடங்களிலும் வழக்கமாயிருக்கிறது.

இந்த நாட்களுள் முக்கியமாக நடைபெற வேண்டிய கிரியைகள் அல்லது சடங்குகள் பதினெட்டு என்று காமிகாகமம் கூறுகின்றது. அவை முறையே வ்ருஷயாகம், த்வஜாரோஹணம், ப்ரஹத்தாளம், அங்குரம், யாகசாலை, அஸ்த்ரயாகம், பலிதானம், யானக்ரமம், பரிவேஷம், நீராஜனம், கௌதுகம், தீர்த்தசங்க்ரஹணம், சூர்ணோத்ஸவம், தீர்த்தகம், அவரோஹணம், ஸ்நபநம், விவாஹம், பக்தோத்ஸவம் என்பனவாம். வேறு சில ஆகமங்களில் இந்தமுறை மாற்றப்பட்டும், இவைகளில் சில விடப்பட்டும்,இவைகளிலில்லாத சில சேர்க்கப்பட்டும், பதினெட்டுக்கு மேலே சில கூறப்பட்டும் இருக்கின்றன. புதியதாகக் கூறப்பட்டவைகளுள் முக்கியமானவை ரதாரோஹணம், ம்ருகயாத்திரை, பூர்ணாஹுதி மௌனோத்ஸவம், சண்டயாகம் என்பனவாம்.

மேற்கூறியவைகள் ஒவ்வொன்றையும் விளக்கி அந்தந்தச் சடங்கின் விவரங்களை யெல்லாம் எழுதினால் இது ஒரு பெரிய புத்தகமாய்விடும். சுருக்கமாகக் கூறின், சுத்தமான மண் கொண்டுவந்து,நவதானியங்களை முளைக்கவைத்து, கொடியேற்றித் திருவிழாவில் தினந்தோறும் குறித்த காலங்களில் நெய், சமித்து முதலியன கொண்டு யாகம் செய்து, பல வாகனங்களின்மீது பஞ்சமூர்த்திகட்குஇரண்டு வேளையும் உத்ஸவம்செய்வித்து, திருக்கல்யாணம், ருத்ரபாத தீர்த்தம்,முளை விடுதல், கொடியிறக்கம், சண்டேசுவரர் உத்ஸவபூர்த்தி, திருவூடல் முதலியன செய்வது திருவிழாவில் நடைபெறும் சடங்குகளாம்.

ஆவணக்காப்பக
187153



இவ் வுலகத்துக்கும் மற்றுமுள்ள எல்லா வுலகங்கட்கும் முழுமுதற் கடவுளாயிருப்பவர் சிவபெருமான் என்று நமது சைவசமயம் கூறுகின்றது. சிவபெருமான் செய்கின்ற காரியங்களுக்குப் பஞ்சக்ருத்யங்கள் அல்லது ஐந்து தொழில்கள் என்று பெயர். அவை சிருஷ்டி (உண்டாக்குதல்), ஸ்திதி (காப்பாற்றுதல்), சம்ஹாரம் (அழித்தல்), திரோபாவம் (மறைத்தல்), அநுக்ரஹம் (அருள் கொடுத்தல்) என்பனவாம். இந்த ஐந்து தொழில்களையும் பத்துநாள் திருவிழாவில் உள் அர்த்தமாக வைத்திருக்கிறார்கள்பெரியோர்கள்.

பொதுவாக மண்ணெடுத்தல், முளை தெளித்தல், கொடியேற்றம் முதலியவைகளைச் சிருஷ்டி கிருத்யமாகக்கொள்ளலாம். இவைகள் இரண்டாம் திருவிழாவுக்குள் முடிந்துவிடும். பிறகு வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் முதலியவற்றை ஸ்திதி கிருத்யமாகக் கொள்ளலாம். தேர் உத்ஸவம், பரிவேட்டை, சாந்துஅணிதல் என்ற சடங்குகளை சம்ஹாரக்காரியங்கள்ாகக் கொள்ளலாம். சப்தமில்லாமல்மௌனமாக நடக்கும் உத்ஸவம், முளையை விடுதல்முதலியவற்றைத் திரோபவத்துக்கு அறிகுறியாகக் கொள்ளலாம். நடராஜர் உத்ஸவத்தில் மட்டையடி, திருஊடல் உத்ஸவம் முதலியவற்றை அநுக்ரஹமாகக் கொள்ளலாம். இவ்வாறுசில ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆகமங்களில் இந்தச் சடங்குகட்கெல்லாம் நீளமான வடமொழிப் பெயர்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. உதாரணமாக மண்ணெடுத்தலுக்கு ம்ருத்சங்க்ரஹணம்என்றும்,முளை தெளித்தலுக்கு அங்குரார்ப்பணம்என்றும், பரிவேட்டைக்கு ம்ருகயாத்திரையென்றும், சாந்தணிதலுக்கு க்ருஷ்ணகந்தோத்ஸவ மென்றும் பெயர்களிருக்கும்.

வேறு சில ஆகமங்களில் பத்துநாள் திருவிழாவைச் சரிபாதியாக்கி, முதல் ஐந்து நாளில் விருத்திக் கிரமத்தில் பஞ்சக்ருத்யங்கள் நடக்கின்றனவென்றும், பிற்பாதி ஐந்து நாளில் லயக்கிரமத்தில் ஐந்தொழில்கள் நடக்கின்றனவென்றும் கூறப்பட்டுள்ளன. இதற்குத் தகுந்த முறையிலேயே வாகனங்களும் ஏற்பட் டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த முறையை அனுசரித்து மனிதனுடைய வாழ்க்கையையும் இரண்டு கூறாக்கி, ஒவ்வொரு கூறையும் ஐந்து பாகங்களாக்கி, ஒவ்வொரு நாள் திருவிழாவுக்கு ஒவ்வொரு விஷயத்தைத் தத்துவார்த்தமாகக் கூறுகின்றது ஓர் ஆகமம். இவ்வாகமத்தின்படி முதல் திருவிழா கர்ப்பாதானம், இரண்டாம் திருவிழா மாயாமலக் கூட்டுறவு, மூன்றும் நாள் பலப் பிராப்திப் புசிப்பு, ச-ம் நாள் தனுகரணபுவனபோக போக்யப் பிராப்தி, ரு-ம் நாள் பஞ்சேந்திரிய வசமாதல், கூ-ம் நாள் ராகத்வேஷ நிவாரணம், எ-ம் நாள் சப்ததாது பல வ்ருத்தி, அ-ம் நாள் தேஹசம்பந்த சஞ்சயம், ஜடரூப விநாசனம், அஷ்டமூர்த்தி சரீரம் கிடைத்தல், கூ-ம் நாள் நவஜன்ம விநாசனம், மாயா கவச பேதனம், கO-ம் நாள் சாயுச்சியம் என்று பத்து நாட்களுள் முதல் ஐந்து நாட்களில் விருத்திக் கிரமக் காரியங்களும், பின் ஐந்து நாட்களில் லயக்கிரம (அல்லது நிவர்த்திக்கிரம) காரியங்களும் கூறப்பட் டுள்ளன.

இனி ஒவ்வொரு நாள் திருவிழாவையும், அதில் வரும் வாகனங்கள், நடக்கும் சடங்குகள் முதலியவற்றையும் பற்றிச் சிறிது சிந்திப்போம். எல்லாக் கோயில்களிலும் முன் கூறியபடி ஒரே ஆகமத்தை அனுஷ்டியாத படியால் உத்ஸவ முறையில் பல வித்தியாசங்கள் உள்ளன. உதாரணமாகச் சில கோயில்களில் முதல் நாள் விருக்ஷ வாகனம், வேறு சில கோயில்களில் ஐந்தாம் நாளில் விருக்ஷவாகனம், சில கோயில்களில் நான்காம் நாளிலும், வேறு சில கோயில்களில் ஐந்தாம் நாளிலும் விருஷபவாகன சேவை, சில கோயில்களில் ஏழாம் நாள் தேர், சில விடங்களில் ஒன்பதாம் நாள், இதே போல் திருக்கல்யாணம் முதலியனவும் நடக்கின்றன. ஆகையால் உத்ஸவ முறையைப்பற்றி ஒவ்வொரு நாளாக எடுத்து விவரிக்க வேண்டுமென்றால் ஏதாவது ஒரு கோயிலைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தமிழ் நாட்டுக்குத் தற்போது அரசாங்கத் தலை நகராயுள்ளது சென்னை மாநகரம். இச்சென்னை மாநகரத்தில் பழமையான பாடல்பெற்ற சிவாலயம் திருமயிலைக் கபாலீசுவரர் கோயில். இந்தக் கோயிலில் திருவிழா மிகச் செம்மையாகவும், காலத்திலும், முறையாகவும் நடக்கிறது. எனவே இந்தத் திருக்கோயிலில்நடக்கும் முறையையே பீடிகையாகக் கொண்டு சில விஷயங்களை ஆராய்வோமாக. இதிலிருந்து மற்ற ஆலயங்களில் நடக்கின்ற உத்ஸவங்களின் உட்பொருளை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

கொடி யேறுவதற்கு முன்னுள்மாலை சண்டேசுவரர், அஸ்தராயர் சென்று புத்துமண் எடுத்துவருதல், பிறகு நவதானியங்களைத் தெளித்து முளைக்க வைத்தல். இதற்கு அங்குரார்ப்பணம் என்று பெயர் (அங்குரம்= முளை, அர்ப்பணம்= தெளித்தல்) அதாவது சிருஷ்டி யாரம்பம்-மண்ணைப் பதம் பண்ணி வித்திடுவது சிருஷ்டியைக் குறிக்கிறது என்பதை எல்லாரும் நன்ருக அறிந்துகொள்ளலாம்.

பிறகு விநாயகர் உத்ஸவம் நடக்கிறது. விநாயகர் எல்லாவித விக்னங்களை (இடையூறுகளை) யும் போக்கும் சக்தியுடையவர். அதற்காக அவருக்கு விக்னேசுவரர் என்றும் பெயர். இடையூறில்லாமல் திருவிழா செவ்வையாக நடப்பதற்கு அவருக்கு முதலில்பூசை செய்வது நல்லது. மேலும் விநாயகர் பிரணவ சொரூபம். ஓம் என்ற பிரணவமே சிருஷ்டிக்கு மூலமாகவுள்ளது. ஆகையால் விநாயகர் உத்ஸவமும் சிருஷ்டிக்கு அறிகுறியாகும்.

இதன் பிறகு, முதல் திருவிழாவன்று காலையில் துவஜாரோஹணம் என்ற கொடியேற்று விழா நடக்கிறது. அதாவது ரிஷப வுருவத்தை ஒரு படத்திலெழுதி, அதற்குப் பூஜைகள் செய்து கொடி மரம் என்ற துவஜஸ்தம்பத்தின் உச்சியில் கயிறும் புதிய துணியும் கொண்டு இந்த ரிஷபக்கொடியை ஏற்றுவது. இந்தக் கொடியைப் பற்றி உமாபதி சிவசாரியார் "கொடிக்கவி" என்று சில பாடல்கள் எழுதியுள்ளார். அதிலே பல தத்துவார்த்தங்களிருக்கின்றன. பொதுவாக இக் கொடியேற்றத்தில் சொல்லப்படும் மந்திரங்கள் மக்கள் நன்ருக வாழவேண்டுமென்றும், தத்துவங்கள் தோன்றுகின்ற முறையின்னதென்றும் புலப்படுத்தும். சாதாரண அறிவு கொண்டு பார்த்தால் கொடியில் எழுதப்படும் ரிஷப உருவம் துள்ளுகின்ற காளை மாட்டின் உருவமாகும். இதை தருமத்தின் உருவ மாகவும் ஆத்மாவின் உருவமாகவும் பெரியோர் கொள்வர். எனவே தருமத்தையும் ஆத்மாக்களையும் கீழ் நிலையிலிருந்து மேல் நிலைக்கு உயர்த்தும் காருண்யச் செயலுக்காகத் திருவிழாநடத்தப்படுகிறது என்பதற்கு அறிகுறியாகக் கொடியேற்றம் நடக்கிறது என்று ஒருவாறு ஊகிக்கலாம்.



துவஜாரோகணத்திலிருந்து தீர்த்தவாரி வரை யாகசாலையில் யாகம் நடக்கிறது. இது ஸ்திதி என்ற காப்பாற்றும் தொழிலுக்கறிகுறியாக நடக்கிறது. இந்த யாகம் உயிர்ப் பலியில்லாத சுத்தமான வேள்வி யென்பதை நன்ருக உணரவேண்டும்.

முதல் நாள் இரவு புன்னை விருக்ஷத்தடியில் சிவபெருமான் மற்ற மூர்த்தங்களோடு வருகிருர். இதை விருத்திக்கிரம சிருஷ்டி கோலம் என்பர். மரத்தின் கிளைகள், இலைகள் முதலியன போலத் தத்துவங்களாகவும், எண்ணிறந்த ஜீவராசிகளாகவும் இறைவன் விளங்குவார் என்பதை இது குறிக்கிறது. மரத்தின் வேரில் பீடமிட்டு அதில் உமையோடு கூடிய சிவ வுருவம் விளங்குகிறது. அதாவது இத்தகைய சிருஷ்டிக்கெல்லாம் வேராக (அதாவது மூலகாரணமாக)விருப்பது அருள் என்ற உமையோடு கூடிய அறிவு என்ற சிவமே யென்பதாம்.

இரண்டாம் நாள் காலையில் சூரியப் பிரபையிலும், மாலையில் சந்திரப் பிரபையிலும் இறைவன் எழுந்தருளுகிருன். இது விருத்திக் கிரம ஸ்திதிக் கோலம். உலகத்திலுள்ள உயிர்கள் பிழைத்திருப்பதற்குக் காரணம் சூரிய வெப்பம். அவ்வெப்பம் இல்லாவிடில் புசிப்பதற்குப் புல்லும் கிடைக்காது. அவ்வெப்பமே கடலில் நீரை யுண்டு மேகங்கள் மூலமாய் மழையைத் தருகிறது. இன்னும் எல்லா வகையான தொழில்களுக்கும் அது மூலசக்தியாய் விளங்குகிறது. எனவே உலகத்தைக் காப்பாற்றுவது சூரியன் தொழில். சந்திரன் இன்பத்தைத் தருபவன் என்பதைக் காதல்கொண்டவர்கள் நன்கறிவார்கள். ஆகையால் சூரியப் பிரபையிலும் சந்திரப் பிரபையிலும் இறைவனை வைத்து வணங்குதல் ஸ்திதித் தொழிலுக்கு அறிகுறி யென்பதை ஒருவரும் மறுக்க இயலாது.

மூன்றும் நாள் காலையில் அதிகார நந்தியின் மேலும், மாலையில் பூதவாகனத்தின் மீதும் இறைவன் வருவது வழக்கம். இவைகளை விருத்திக்கிரம சங்காரக் கோலங்கள் என்பர். அதிகார நந்தியைப்பற்றி விசேடமாகப் புராணங்களில் பார்க்கலாம். சுருங்கக் கூறின், மான், மழு, சதுர்ப்புஜம், திரிநேத்ரம் முதலிய அடையாளங்களையுடைய சாரூப்பிய பதவிபெற்ற விஞ்ஞானகலர் என்ற ஆன்ம வர்க்கத்துள் சிறந்தவர் அதிகார நந்தி யென்பவர். இவர் திருக்கைலாயத்தில் சிவபெருமான் சந்நிதியில் அவர் ஆணையின்படி அதிகாரம் செலுத்துபவர். 'வந்திறையடியிற் ருழும் வானவர் மகுடகோடி பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையால் தாக்கும்' உரிமையுடையவர். இத்தகைய தொழில் சங்காரத்துக் கறிகுறியாகும். பூத கணங்கள் இறந்தவுடன் ஆன்மாக்களைக் கொண்டு போகும் தொழிலுடையன. இன்னும் பலவகையினும் நந்தி, பூதம் ஆகிய இருவரின் தொழிலையும் பிரித்துணர

லாம். இவ்விரண்டு வாகனங்களின் மேல் வருவது சங்காரத்துக் கறிகுறியாகும் என்பதை இவ்வாறு சுருக்கமாய் உணரலாம்.

நான்காம்நாள் நாக வாகனத்தில் தவ வேடத்தோடு இறைவன் எழுந்தருளுகிறார். நஞ்சு, மாணிக்கம், படம் ஆகிய மூன்றையும் மறைத்து வேண்டும்போது வெளிப் படுத்தும் திறமையுடையது நாகம். மேலும் தானும் மறைந்திருந்து வேண்டும்போது புற்றிலிருந்து வெளிவரும் தொழிலுடையது. எனவே நாகவாகனம் மறைத்தல் தொழிலாகிய திரோபாவம் என்பதற்கு அறிகுறியாகிறது. குண்டலி சத்தி, சுழிமுனை நாடி முதலியவற்றோடு நாகத்தை ஒப்பிட்டுப்பல வகையாகவும் தத்துவார்த்தங்கள் கூறலாம்.

ஐந்தாம் திருவிழாவன்று, தூய வெள்ளை நிறமுடைய விருஷப வாகனத்தின்மேல் கடவுள் வருவது வழக்கம். சிவனடியார்கள் சரித்திரங்களிலெல்லாம் கடைசியாகச் சிவபெருமான் அருள் புரிகின்ற காலத்தில் விருஷப வாகனத்தின் மேலிருந்து காட்சி கொடுத்தார் என்றுதான் இருக்கும். அதாவது அருள் பெற்ற ஆன்மாவுக் கறிகுறியாகிய ரிஷபம், எவ்வகையான மாசும் இல்லையென்பதற் கறிகுறியாகிய சுத்த வெள்ளை நிறமுடையதாய், தருமம் என்ற அறத்தையே நான்கு கால்களாகக் கொண்டு நின்று, ஆணவ மலத்தையொழித்து, அருளொடு கூடிய அறிவைப் பணிவுடன் ஏற்று நிற்கின்றது என்னலாம். ஆன்மாக்களுக்கு இறைவன் பேருளால் வருவது இப்பேறே யாதலால் இக்கோலம் அநுக்கிரகக்கோலமாகும். இன்னும் இதைப்பற்றி மிக விரிவாகக் கூற இடமுண்டு.

ஆறாந் திருவிழாவில் இறைவன் யானைமீது வருங் காட்சி நன்றாயிருக்கும். இது லயக்கிரம (=ஒடுங்கும் முறை) சிருஷ்டி கோலமாகும். யானையின் ஒவ்வோர் உறுப்புக்கும் ஒவ்வோர் அர்த்தம் கொடுத்து இவ்வாறு கூறுவதுண்டு. எவ்வாறு விருத்திக்கிரமத்தில் (அதாவது வெளிவரும் முறையில்) கிளை, இலை முதலியவைகளையுடைய மாம் சிருஷ்டியை உணர்த்துகிறதோ, அஃதேபோல் இவ்வளவு விரிந்த பாகுபாடுகளெல்லாம் ஒடுங்கி ஒரே பிண்டமாகப் பருமனான உடம்பு கால்களையுடைய யானையைப்போல் ஒடுங்கி விடுவது லயக்கிரமத்தில் கடைசிப் படியாகவுள்ள சிருஷ்டியைக் குறிக்கிறது என்று கொள்வது அறிவுக்குப் பொருத்தமேயாம்.

ஏழாந் திருவிழாவில் தேரின்மீது கடவுள் வருகிறார். திரிபுர தகனம் செய்த காலத்து எல்லாத் தேவர்களும் தேரின் பல பகுதிகளாக நின்று சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்தனர் என்பதைப் பலபுராணங்களில் பரக்கக் காணலாம். அண்டகோடிகளெல்லாம் திரிபுராதிகளால் ஹிம்சிக்கப் பட்டுப் பொறுக்க முடியாமல், காப்பாற்ற வேண்டும் என்று கதறிச் சிவபெருமானை வேண்ட, அவர் எல்லாத் தேவர்களும் உறுப்புக்களாக அமர்ந்துள்ள தேர், வில், பாணம் முதலியவற்றோடு சென்று எந்தத் தேவருடைய உதவியுமின்றி, எந்த ஆயுதத்தையும் உபயோகப்படுத்தாமல் சிரித்து எரித்தார் திரிபுராதிகளை என்பது புராணம். இவ்வாறு எரித்தது சங்காரம் ஆயினும் உலக கோடிகளைக் காப்பாற்றுவதற்கே



இது நடந்தபடியால் தேர் உத்ஸவம் ஸ்திதித் தொழிலுக்கறிகுறியாயிற்று. இங்கே முப்புரம் என்பது மும்மல காரியம் என்று திருமூலர் கூறியதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். மும்மலச் சேட்டையினின்றும் விடுவித்து ஆன்மாக்களை லயக்கிரமத்தில் காப்பாற்றுதலுக்கு இவ்வுத்ஸவம் அறிகுறியாகின்றது.

எட்டாம் நாள் பரிவேட்டை உத்ஸவம் நடக்கிறது. இதைத்தான் ம்ருகயாத்ரை யென்றும் ஆகமம் கூறும். சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டு துஷ்ட நிக்ரஹம் செய்வது. இது லயக்கிரம சம்ஹாரம். ஒன்பதாம்நாள் பிக்ஷாடனர் திருக்கோல உத்ஸவம். லயக்கிரமத்தில் திரோபவம். தம்முடைய பரிவாராதி விசேஷங்களை யெல்லாம் மறைத்துக் கேவலம் பிச்சையெடுப்பவர்போல் வருவதால் திரோபாவக் கோலம் என்னலாம். பிக்ஷாடனமூர்த்தத்துக்கு வேறு வேறு பல தத்துவார்த்தங்களும் கூறலாம். தாருகாவனத்து ரிஷிகள் ரிஷிபத்தினிகள் ஆணவத்தைப் போக்கி அவர்கட்கு அநுக்கிரகம் செய்ய எழுந்த சிவபராக்கிரமக் கோலம் இதுவே.

பத்தாம் நாள் காலையில் நடராஜர் உத்ஸவம். நடராஜர் திருவுருவத்திலேயே பஞ்சக்ருத்யங்கள் உள்ளனவென்பது "தோற்றம் துடியதனில்" என்ற பாடல் மூலம் விளங்கும். அதாவது சிருஷ்டி உடுக்கையிலும், ஸ்திதி அமைப்பிலும், சங்காரம் எரியகலிலும், திரோபாவம் ஊன்றிய பாதத்திலும், அநுக்கிரகம் ஆடிய பாதத்திலும் குறியீடாகவுள்ளனவென்று சிவஞான சாத்திரங்கள் கூறுகின்றன. நடராஜர் உத்ஸவத்திலும் பஞ்சக்ருத்யங்கள் உள்ளன. சபையை விட்டுப் புறப்படுதல் சிருஷ்டி, அபிஷேகம் ஸ்திதி, சாந்தணிதல் அலங்கார தீபாராதனை சம்ஹாரம், வெள்ளைச் சாத்துபடி திரோபாவம், வீதிவலம் வந்து மட்டையடி தரிசனம் அநுக்கிரகம் என்பதாகப் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். எனவே பத்துநாளில் நடைபெறும் ஐந்தொழில் குறிப்புக்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகுத்துப் பத்தாம்நாள் காலை நடராஜர் உத்ஸவம் காட்டிவிடுகிறது.

நடராஜர் உத்ஸவம் முடிந்தவுடன் தீர்த்தவாரி நடக்கிறது. இதையே மஹாருத்ரபாத தீர்த்தம் என்றும் சொல்வார்கள். தீர்த்தவாரியோடு யாகசாலை வேலைகள் முடிகின்றன. பத்தாம்நாள் இரவு திருக்கல்யாணம் நடக்கிறது. அருள்வடிவாகிய சத்தி அறிவு மயமாகிய சிவத்தோடு கலந்து பிரபஞ்ச காரியத்தை நடத்துவதுதான் முறையென்பதைக் காட்டுவதற்கே இக் கல்யாணம் நடக்கிறது. சிவஞான சாத்திரத்தில் இன்னும் சிவத்தின் இயல்பு இலக்கணம், சத்தியின் இயல்பு இலக்கணம் இவற்றை நன்றாகப் பயின்றால் கேவலம் காமத்துக்கும் காதலுக்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் மக்கள் செய்துகொள்ளும் கல்யாணத்தைப் போலல்ல, சிவனுக்கும் சக்திக்கும் நடக்கும்கல்யாணம்என்பதை மிக நன்றாக உணரலாம். ஒவ்வொரு வருஷமும் தவறாமல் கல்யாணம் நடந்தபோதிலும் சிவன் பிரமசாரியென்றும், சத்தி கன்னிகையென்றும்தான் அழைக்கப்படுகிறார்கள். இதை "பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாவள்" என்பதுபோன்ற பல வாக்குகள் வலியுறுத்தும். திருக்கல்யாணமும் அடு

த்தநாள் நடைபெறும் சத்தி ஊடலும் லயக்கிரமஅநுக்கிரக உத்ஸவங்களாம்.

திருக்கல்யாண மானவுடன் கைலாச வாகனத்தின்மேல் உத்ஸவம் நடக்கிறது. அதாவது இமயமலையை இராவணன் எடுக்க முயலும் கோலமுடைய வாகனம். பத்துத் தலையும் இருபது கையும் உடைய இராவணன் துன்பத்தை விளைவிப்பதற்குப் பலவகைப் பட்ட வழிகளையுடைய ஆணவ மலத்துக் கறிகுறியாகிறான். எல்லாவகையான சர அசர வர்க்கங்களை யெல்லாம் தன்னிடத்தே கொண்டுள்ள இமயமலை (இது இந்நிலவுலகில் எல்லாப் பொருள்களையும்விட மிகப் பெரியது) பிரபஞ்சத்துக்கே அறிகுறியாகின்றது. இராவணன் இமயத்தைத் தூக்குவதற்கு முயற்சிசெய்வது ஆணவம் பிரபஞ்சத்தை யறிந்து இன்புற முயற்சிப்பதற்கு உவமையாகின்றது. இராவணன் அவ்வாறு தூக்க. முடியாமல் துன்பமடைந்தான். அவ்வாறே ஆணவமும். இறுதியில் ஆணவத்தை யிழந்து கடவுளைத் தியானித்து வரம் பெற்று இராவணன் இன்புற்றான். அவ்வாறே உயிர்களும் ஆணவத்தை ஒழித்துக் கடவுள் திருவடிகளைப்பற்றித்தொழுது பேரின்பம்அடையலாம். இத்தகைய அரியதொரு அநுக்கிரகச் செயலையும் அதிற்பதிந்துள்ள தத்துவார்த்தங்களையும் சிந்தித்துநன்குணருவதற்காக இவ்வுத்ஸவம் மௌன உத்ஸவமாக நடக்கிறது. அதாவது மேளதாளங்களில்லாமல் நடக்கிறது. இராவணன் வீணை வாசிப்பதைச் சிவபெருமான் கேட்பதால் மேளகோஷம் கூடாதென்பாருமுண்டு. கைலாச வாகனம் முடிந்தவுடன் அவரோஹணம் (கொடியிறக்கம்) நடக்கிறது. இதுவும் அநுக்கிரஹத்தின் பாற்படும். பிறகு சண்டேசுவரர் உத்ஸவபூர்த்தி நடக்கிறது. அதாவது "தாதையைத் தாளற வீசிய" என்ற திருப்பல்லாண்டுச் செய்யுளில் கூறியபடி உபசாரங்கள் நடக்கின்றன. சிவபெருமான் அணிந்த மாலையைச் சண்டேசுவரருக்கு அணிவித்து உத்ஸவம் செய்வது. இதையே பக்தோத்ஸவம் என்ற அங்கமாகவும் கொள்ளலாம்.

அடுத்த நாள் மாலையில் பந்தம் பறி உத்ஸவம் என்ற திருஊடல் உத்ஸவம் நடக்கிறது. அதாவது சிவனுக்கும் சக்திக்கும் ஊடல் வந்து விட்டதாகவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தூது சென்று பிணக்கைத் தீர்த்து வைப்பதாகவும் நடக்கும் சடங்கு. உலக வழக்கிலும் இல்லறத்தில் 'ஊடுதல் காமத்துக்கின்பம்" என்று திருவள்ளுவர் கூறுவதுபோல, சிவனுக்கும் சக்திக்கும் ஊடல் வந்ததாக வைத்துச் சிவபெருமான் அருட்டிறங்களை யெல்லாம் எடுத்து விரிவாகக் கூறுவதற்கு ஒரு முகாந்தரம் ஏற்படுத்தியதாகவே இவ்வுத்ஸவத்தைக் கொள்ளலாம்.

மேற்கூறிய முறை பொதுவாக மற்றக் கோயில்களில் நடப்பதைப்போல் திருமயிலாப்பூரிலும் நடைபெறும் உத்ஸவ முறை. சிறப்பாகத் திருமயிலாப்பூருக்கென்றே அறுபத்துமூவர் உத்ஸவம், அங்கம்பூம்பாவை ஐதீக உத்ஸவம் என்பன நடக்கின்றன. அதாவது மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார் இறந்துபோன தமது பெண்ணின் எலும்புகளை ஒரு மட்குடத்தில் வைத்திருந்து திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது ஊருக்குவந்தபோது அக்குடத்தை அவரெதிரில் வைத்து மீண்டும் உயிரோடு தமது பெண்ணை



எழுப்பித் தரவேண்டுமென, சுவாமிகளும் கபாலீசுவரர் மீது "மட்டிட்ட" என்ற பதிகம் பாடி அப்பெண்ணை உயிரோடு எழுப்பிய ஐதீகம் இவ்வுத்ஸவத்தில் நடக்கிறது. இந்த ஐதீகம் முடிந்தவுடன் பஞ்சமூர்த்திகளும் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு காட்சி கொடுக்கிறார்கள்.

சாதாரண மக்கள் இந்த உத்ஸவத்தில் வரும் திருவுருவங்களைப் பார்த்துப்பலவிதமான கதைகளைச் சொல்லுகிறார்கள். அவைகள் அவர்களுடைய அறியாமையைக் காட்டும். உதாரணமாக (1) சம்பந்த சுவாமிக்கும் அங்கம் பூம்பாவைக்கும் கல்யாணம்என்றுசிலர் கூறுவார்கள். இது தப்பு. சுவாமிகள் அங்கம்பூம்பாவைக்கு உயிர் கொடுத்த தகப்பன் முறையிலிருந்ததால் கல்யாணம் செய்துகொள்ள முடியாதென்று சொன்னதாகவே புராணம் கூறுகின்றது. (2) அறுபத்துமூவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளென்றும் அவர்களைப் பெற்றெடுத்த காரைக்காலம்மையார் எலும்பெல்லாம் தெரியும்படி இளைத்திருந்த போதிலும், மேலும் பிள்ளை வேண்டுமென்று தவமிருப்பதாகவும் சிலர் கூறுவார்கள். இது பெரிய பாவத்துக்கிடமாகும். அறுபத்து மூவரும் வேறு வேறு காலங்களிலிருந்து, வேறு வேறு ஜாதிகளிற் பிறந்து, வேறு வேறு வழிகளில் தொண்டுசெய்து முத்தி யடைந்தவர்கள். காரைக்காலம்மையார் பிள்ளை வேண்டுமென்று தவம் செய்யவில்லை. பேய்க் கோலம் வேண்டுமென்று இறைஞ்சி அதனைப் பெற்று முத்தி யடைந்தார். (3) கபாலீசுவரர் இடது பக்கத்தில் பாதி மறைவாயிருப்பது அவரது கூத்தியார் அவரது பெண்சாதி தனியே பின்னால் வருகிறார் என்பாருமுண்டு. இவ்வாறுகூறுவதும் மடத்தனமே. சோமாஸ்கந்தமூர்த்தமாகவே கடவுள் எழுந்தருளுகிறார். அதாவது இடப்பாகத்தில் சக்தியும், வலப்பாகத்தில் சிவமும் இருவருக்கும் நடுவில் பாலசுப்பிரமணியமும் விளங்கவுள்ள திருக்கோலம். இதையே சத்சிதானந்தக் கோலம் என்பர். இதுவன்றித் தனியே சக்தியை மற்றோர் உருவமாக வைத்து உத்ஸவத்தில் கொண்டு வருவது வழக்கம். சிவபெருமான் உருவங்கள் பலவுள. பிக்ஷாடன மூர்த்தம் தனியே உத்ஸவமாகிவரும். சந்திரசேகர நடராஜமூர்த்தங்கள் சக்தியோடுமட்டும் வெளியே உத்ஸவமாகி வரும். சோமாஸ்கந்தமூர்த்தம் ஸ்கந்த சண்ட கணேச பார்வதிசமேத பஞ்சமூர்த்திகளாகத் தான் வெளியே உத்ஸவமாகிவரும். ஆகையால் சிவபெருமான் இடப்பாகத்திலிருப்பதும்,வலப்பாகத்திலோ அல்லது பின்னாலோ தனியேவருவதும் சக்திதான். மனைவியொன்று கூத்தியொன்று எனக் கூறுவது பெரும் பாவமாகும். இவ்வாறே சுப்பிரமணிய மூர்த்திக்கும் ஒன்று மனைவி மற்றொன்று கூத்தியென்பதும் பாவமாகும்.வல்லி, தேவசேனையென்ற இரண்டு சக்திகள் இச்சாசக்தி, கிரியா சக்திகள், வேல் ஞானசக்தி, ஆக மூன்று சத்திகளோடுங் கூடியவர் முருகப்பெருமான்.

மேலே கூறிய விஷயங்களிலிருந்து திருவிழாவானது ஐம்பெருந் தொழில்களை அறிவுறுத்தும் குறிகளடங்கியதாயிருக்கிறதென்பதை நன்றாக அறியலாம். மஹோத்ஸவம் என்ற சொல்லுக்கே இந்தப் பொருள்தான் என்று வடமொழி யறிந்தோர் கூறுவர்,

அதாவது மஹா=பெரிய. உத்=உயர்வான, ஸவ=சிருஷ்டி முதலிய காரியங்கள் என்று பிரித்து உயர்ந்த சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும் பெரிய குறியாவது என்று கூறலாம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் மேன்மேலும் இதிலுள்ள விஷயங்களைச் சிந்தித்து இம்மை மறுமைகளில் நிறைந்த இன்பத்தை யடையுமாறு இறைவனை வேண்டுகிறேன்.

[குறிப்பு - இக்கட்டுரையின் பல பகுதிகள் அகோரசிவாசாரியார் இயற்றிய "கிரியாக்ரம ஜோதியின்" ஆரும் பாகமாகிய "மஹோத்ஸவவிதி" என்ற வடமொழி நூலின் துணை கொண்டும், சில பகுதிகள் யாழ்ப்பாணம் - நா - கதிரைவேற் பிள்ளையவர்கள் இயற்றிய "சிவக்ஷேத்திராலய மஹோத்ஸவ உண்மை விளக்கம்" என்னும் நூலின் துணைகொண்டும் எழுதப்பட்டன. இக்கட்டுரையில் கூறப்பட்ட விஷயங்களையே முடிந்தமுடிபுகளாகக் கொள்வது தவறு. இவற்றைக் குறிப்புக்களாக மட்டும் எண்ணி, ஒவ்வொருவரும் ஆழ்ந்த சாத்திரவுணர்ச்சியையும் ஆராய்ச்சியறிவையும் கருவிகளாகக் கொண்டு உண்மைகண்டு உவகை எய்துவதே முறையாகும்.

---

# சமரசம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.,]
(மாஜி தாசில்தார், சிந்துபூந்துறை.)

## I. முகவுரை

இக்காலத்து நமது தமிழ்நாட்டு நலத்தைக் கருதிப் பேசியும் இயன்றவாறு முயன்றும் வருகின்ற நன்மக்கள் சமரசம் சமரசம் என்று மனதினல் நினைத்தும் வாயினற் பேசியும் எழுத்தினல் எழுதியும் வருகிருர்கள். நம்மவர்களிற் பலர் தாங்கள் வழங்கிவருஞ் சொற்களில் அடங்கியுள்ள கருத்துக்களை எல்லாம் நன்கு அறியாதும் அறிந்தாலும் கவனியாமலும் பேசி, எழுதி வருகிருர்கள். அதனல் நமது தமிழ் நாட்டு மக்களுக்குள் பல கருத்து வழுக்கள் உண்டாகின்றன. அவ்வாறு திட்டமில்லாமலும் நெகிழ்ச்சியாயும் வழங்கப்படுஞ் சொற்களில் சமரசம் என்னும் சொல் ஒன்று. சமரசம் என்னும் சொல்லில் அடங்கியுள்ள கருத்துக்கள் இன்ன என இங்கு நாம் ஆராய்வாம்.

2. சமரசம் என்னும் சொல் வடமொழிச் சொல். அது சம என்னும் பெயருரிச் சொல்லும் ரசம் என்னும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து ஆகிய தொடர்மொழி. சம் என்பது ஒப்பான (Equal) என்று பொருள்படும். ரசம் என்னும் சொல் சுவை (Taste) என்று பொருள்படும். ஆகவே சமரசம் என்னும் தொடர்மொழி ஒப்பான சுவை என்று பொருள்படும். சுவை என்னும் சொல் முதற்பொருளில் (Primary meaning) நாவினற் சுவைக்கப்படுஞ் சுவையைக் குறித்துப் பின் எல்லாப் பொறிகளாலும் மனதினலும் உணரப்படும் உணர்வை (Sense)க் குறிக்கின்றது. அச்சுவையானது, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என எட்டு வகையாகக் கூறப்படுகின்றது. உருத்திரம் என்ற சுவையையுஞ் சேர்த்து சுவை ஒன்பதாகக் கூறப்படுதலுமுண்டு. இழுமென் மொழிக்தெளி தமிழின் வடித்திடு **நவரசமே** என்று



குமரகுருபர சுவாமிகள் முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத் தமிழில் கூறியிருத்தல் காண்க. சமரசம் என்னும் வடமொழிச் சொல்லுக்குச் சரியாகத் தமிழில் ஒப்பு உணர்பு அதாவது ஒப்புணர்வு (Sense of equality) என்று நாம் கூறலாம்.

## II. சமரசம் ஆராய்ச்சி முறை

3. இனிச் சமரசம் என்ற தொடர்மொழியில் அடங்கியுள்ள கருத்துக்கள் இன்ன என ஆராயலாம். முதலாவது சமரசம்என்பது இது அன்று என எதிர்மறை முறைமையின் (Negative aspect) கருதியபின் அது இது என உடன்பாட்டு முறைமையிற் (Positive aspect) கருதுவாம். இவ்விரண்டு முறைமையிலும் நாம் அத் தொடர்மொழியைக் கருதினல் அல்லாமல் அதில் அடங்கியுள்ள கருத்துக்கள் நமக்கு நன்கு புலப்படா.

## III. சமரசம் இது அன்று என்பது

4 "உயிர்களை எல்லாம் நாம் சமரசமாய்க் கருதல்வேண்டும்" என்ற வசனத்தின் பொருள் என்ன? உயிர்கள் ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள்வரை எண்ணில்லாதன வாயுள்ளன. அவைகளை எல்லாம் சமமாக (Equal) நினைத்தல் வேண்டும் என்பது பொருளா? அவைகளெல்லாம் சமமாக நமக்குக் காணப்படுகின்றனவா? ஒன்றுக்கொன்று பல வேறுபாடுகளை யுடையனவாய்க் காணப்படுகின்ற பலவகை உயிர்களை நாம் சமமாக நினைத்தல் எப்படி? ஏனைய உயிர் வகைகளை நீக்கிவிட்டு ஆறறிவுடைய மக்களுயிர்களையாவது சமமாய் நினைக்கலாமா? மக்களும் கல்வி செல்வம் அதிகாரம் முதலியவற்றலும் அறிவுத்திறன் அன்புத்திறன் செயற்றிறன் வகையாலும் பல்வகை வேறுபாடு உடையவர்களாய் நமக்குக் கண்கூடாய்க் காணப்படுகின்றர்களே. நாம் அவர்களை எல்லாம் சமமாய் நினைத்துச் சமரசமாய்க் கருதல் எப்படி? சமமாய் நினைத்தல் வேண்டும்என்பதற்கு எல்லாரிடத்திலும் சமமான அன்பு வைத்து ஒழுகல் வேண்டும் என்பதே பொருள் என்று சொன்னல் எல்லாரிடத்திலும் சமமான அன்பு வைத்தாலுஞ் செயலில் ஒழுகுதல் எப்படி? செல்வன் ஒருவன் பிறனெருவனுக்கு ஒரு உதவியை ஒரு விதமாய்ச் செய்தால் அதே உதவியை அவ்விதமாக எல்லாருக்குஞ் செய்தல் வேண்டும் என்பது பொருளா? அப்படிச் செய்ய அவனல் முடியுமா? மிக்க செல்வமுடைமையினல் முடியுமானலும் உதவியைப் பெறுகிறவர்களெல்லாரும் நற்பயனை அடைவார்களா? ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால் பலதர வயதும் பலதர அறிவுமுடைய பல பிள்ளைகளுக்கும் தாய் தந்தையர்கள் ஒரே வகையான உணவை ஒரே அளவில் அளிப்பதும் சமமான வகையில் கல்வி பயிற்றுவித்தலும் சமரசம் ஆகுமா? உலக நடைமுறை வாழ்வில் (Practical life) நமக்குத் திகைப்பை உண்டுபண்ணுகிற மேலே கூறிய கேள்விகளாலும் இவை போன்ற வேறு கேள்விகளாலும் மக்கள் எல்லாரையும் சமமாக நினைத்தலாவது அவர்களிடத்தில் சமமான அன்பு வைத்தாலும் செயல் முறையில் ஒழுகலாவது சமரசம் ஆகாது என்று நமக்குப் புலனுகின்றது. அப்படியானல் சமரசம் என்பதுதான் யாது? சமரச ஒழுக்கம் இன்னது [illegible] நாம் திகையாதபடி

187153

வழி காட்டுதற்கு அடிப்படையான உண்மையாதாவது உளதா எனக் கேட்பின் அதனைப் பற்றி இனி உடன்பாட்டு முறையில் ஆராய்வாம்.

## IV. சமரசம் இது என்பது

4. நமது ஆராய்ச்சி எளிதாய் விளங்கும்படி ஒரு சிறு தொகை மக்கள் அடங்கியுள்ள ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். அக்குடும்பத்தில் தாய் தந்தையர்களுக்கு 1, 5, 9 வயது உள்ள மூன்று பெண் மக்களும் 3, 7, 11, 13 வயது உள்ள நான்கு ஆண் மக்களும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். தாய் தந்தையர்க ளிருவரும் தாங்கள் பெற்ற இந்த ஏழு மக்களிடத்திலும் இயல்பாகவே சமரச ஒழுக்கம் பூண்டொழுகுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் தங்கள் மக்கள் எல்லாரும் பின் வாழ்க்கையில் சிறப்பான வாழ்க்கை வாழல் வேண்டும் என்று கருதி அச்சிறப்பு வாழ்க்கைக்கு அவர்கள் தகுதியுடையவர்களாகும்படி இளம் பருவத்தில் வேண்டுவனவற்றைச் செய்து கொண்டேயிருப்பார்கள். அத்தாய் தந்தையர்கள் தங்களுடைய நற்கருத்து நிறைவேறும் பொருட்டு ஒவ்வொரு பிள்ளையினுடைய வயதும் அறிவும் பண்பும் அறிந்து அவரவர் நலத்துக்குப் பொருந்தியவாறு உடல் வளர்ச்சிக்கு உணவு அளித்தலும் அறிவு வளர்ச்சிக்குக் கல்வி பயிற்றுவித்தலும் செய்வார்களே அன்றி எல்லாருக்கும் ஒரு வகையான உணவை அளித்தலும் ஒரு வகையான கல்வி பயிற்றுவித்தலும் செய்யமாட்டார்கள். அவர்கள் தங்கள் மக்கள் எல்லாரிடத்திலும் சமமான நற்கருத்தும் சமமான அன்பும் பொருந்திய சமரசம் உடையவர்களானாலும் செயல் முறையில் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாம் அறிந்து நலம் செய்தல் வேண்டும் என்பது தெளிவு. இந்தக் கருத்தைத் திருவள்ளுவ நாயனார், "நன்றாற்றுள்ளுந் தவறுண்டவரவர்—பண் பறிந் தாற்றாக்கடை" என்று கூறி அருளினார். இதனாலத்தாய் தந்தையர்கள் தங்கள் மக்கள் ஒவ்வொருவருடைய பண்பு முதலானவை அறிந்து அவரவர் நலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பொருந்துமாறு வேறு வேறு வகையில் வேண்டுவன செய்தலே ஒரு குடும்பத்தில் நடைபெற வேண்டிய சமரச ஒழுக்கம் என்பது பெறப்படுகின்றது.

## V. உலக வாழ்வில் சமரச ஒழுக்கம்

5. இனி பெருந் தொகை மக்கள் அடங்கிய உலகமாகிய ஒரு பெரிய குடும்பத்தில் மக்களுக்குள் சமரசஒழுக்கம் எவ்வாறு நடைபெறல் வேண்டும் என்பது பற்றிக் கருதுவாம். ஒரு குடும்பத்துத் தாய் தந்தையர்கள் ஏனைய மக்களைப் பாதுகாத்து அவர்களுடைய நலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வேண்டுவன செய்தல் போல உலகில் நமக்கெனவாழாது பிறர்க்கும் தமக்கும் என வாழும் பெருந்தகைமை யுடைய அறிஞர்களே உலக நலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வேண்டுவன செய்து வருகின்றார்கள். அவர்களாலேயே உலகம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அவர்கள் ஏனைய மக்களிடத்தில் எவ்வாறு சமரச ஒழுக்கம் பூண்டு ஒழுகுவார்கள்? உலகிலுள்ள மக்களில் ஒவ்வொருவருடைய நலமுஞ் சேர்ந்ததே உலக நலம் ஆதலால் உலக நலத்தை மனதிலே கருத்தாக உடைய அவர்கள் எந்த மக்கள் உயிராவது தீங்கு அடைதலை விரும்பார்கள்; எல்லா உயிர்களும் நலம் அடைதல் வேண்டும் என்றே விரும்புவார்கள். சமரச ஒழுக்கமானது மனம் வாக்குக் காயச் செயல்களால் உண்டா[illegible] அவர்கள் தங்களுடைய மனச் செயலாகிய நினைப்பும் அன்பும் சம்பந்தப்பட்டமட்டும் தங்கள் பகைவர்களுள்ளிட்ட எல்லா மக்களிடத்திலும் சமமான மனப்பான்மை உடையவர்களாயிருப்பார்கள்; அவ்வாறு அவர்கள் இருத்தலும் கூடுமானது. வாக்குச் செயலாகிய உரை சம்பந்தமாயும் அவ்வாறு அவர்கள் இருத்தல் முடியாது. முடியுமானாலும் அவர்கள் செயல்களால் எல்லாருக்கும் ஒரே விதமான நற்பயன் உண்டாகாது. உலகில் நல்லவர்கள், தீயவர்கள், பொய்யர்கள், வஞ்சகர்கள், மெய்யர்கள் முதலான பல வகைப் பண்புகளை உடைய மக்களிருக்கிறார்[illegible]ள். ஒரே வகையான வாக்குச் செயலும் காயச்செயலும் அவர்களெல்லாருக்கும் சமமான நற் பயனை உண்டாக்கா; சிலருக்குத் தீமையையும் உண்டுபண்ணும். ஆதலின் அறிஞர்கள் எல்லா மக்களிடத்திலும் சமமான நல்லன்புக் கருத்தைத் தங்களுடைய மனதிலே உடையவர்களானாலும் வாக்குச் செயல்களும் காயச் செயல்களும் தங்களுக்கும் பிறர்க்கும் தீங்கு உண்டாகாமலும் பிறர்க்கு நன்மை யுண்டாகும் வண்ணமும் தங்கள் வன்மையின் அளவு செய்வார்கள். இதுவே உலக வாழ்வில் மக்கள் ஒழுக வேண்டிய சமரச ஒழுக்கம் ஆகும்.

## VI. உலகில் சமரச ஒழுக்கத்துக்கு அடிப்படையான உண்மை

6. இனி மேலே கூறிய சமரச ஒழுக்கத்துக்கு ஏதாவது வழிகாட்டி உண்மை (Guiding Principle) இருக்கிறதா என்று கருதலாம். ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர்கள் தங்களுடைய மக்கள் எல்லாருடைய நலம் பற்றிச் சமரசமாய் ஒழுகுதல் அவர்கள் மக்கள் எல்லாருக்கும் பெற்றோர்களா யிருக்கிற பொதுத் தன்மையால் உண்டாகின்றது. அந்தப் பொதுத் தன்மை காரணமாகத் தாய் தந்தையர்கள் தங்கள் மக்கள் எல்லாம் தகுந்த பருவம் அடைந்த பொழுது ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாமலும் இயன்றவாறு நலம் செய்தும் சமரசமாய் ஒழுகல் வேண்டுமென்று விரும்புகிறார்கள். நலத்திலுள்ள மக்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் தீங்குசெய்யாமலும் இயன்றவாறு நன்மை செய்தும் ஒழுகுகிற சமரச ஒழுக்கத்துக்கு அடிப்படையாயுள்ள உண்மையானது, கடவுள் மக்கள் எல்லாருக்கும் தாய் தந்தையாயிருக்கின்றான் என்பது. "தாயு நீயே தந்தை நீயே சங்கரனே" என்று திருஞானசம்பந்த சுவாமிகள் திருவலிவலம் தேவாரப்பதிகத்தில் கூறியிருத்தல் காண்க. தாய் தந்தையர்கள் எவ்வாறு தங்கள் மக்கள் எல்லாரும் மேலே கூறியவாறு சமரசமாய் ஒழுகல் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவ்வாறே மக்கள் எல்லாருக்கும் தாயுந் தந்தையுமான கடவுள், மக்கள் ஒருவருக்கொருவர் எல்லாருடைய நலம் கருதி சமரசமாய் ஒழுகுதல் வேண்டும் என்று விரும்புகின்றான். அதுவுமன்றிக் கடவுள் எல்லா உயிர்களிலும் தங்கி உறைகின்றான். கடவுள் எல்லா மக்களுக்கும் தாய் தந்தையாயிருத்தலுடன் அவர்களிடத்திலும் நீங்காது உறைகின்ற பொதுத் தன்மையே மக்கள் ஒருவர்க்கொருவர்

நலம் கருதி சமரசமாய் ஒழுகல் வேண்டும் என்றும் அறத்துக்கு வழிகாட்டி உண்மை (Guiding Principle) யா யிருக்கிறது. "எவ்வுயிரும் நீங்காதுறையுமிறை சிவனென் - றெவ்வுயிர்க்கு மன்பா யிரு" என்று சைவ சமய நெறி கூறுகின்றது. மேலே கூறிய சமரச ஒழுக்கத்துக்குக் காரணமாயுள்ளன, உயிர் நலமும் உயிர் நலத்துக்கு வேண்டுவதாயுள்ள உடல் நலமுமாகும். ஒரு சாரார் கொள்ளுதல் போல உடல் நலம் மாத்திரம் அன்று. ஆதலின் சைவ சமய நூல்கள் நலம் என்பது 'உயிர்க்கு உறுதி செய்தல்' எனக் கட்டுரை (definition) செய்கின்றன.

## VII. சமயச் சமரசம்

7. மேலே கூறிய சமரசக் கருத்தை உலகில் மக்களுக்குள் வழங்கப்பட்டு வருகிற சாதி, சமயம், வகுப்பு, பால், நிறம், நாடு முதலிய பலவகைப் பிரிவுகளிலும் பிரயோகம் செய்யலாம். சமயத்தில் மாத்திரம் பிரயோகம் செய்து பார்ப்போம். உலகிற்குத் தலைவனாயுள்ள கடவுள் ஒருவனே. எச்சமயத்தார் எப்பெயர் கொண்டு அவனைக் கூறினும் அப்பெயர்களெல்லா வற்றாலும் குறிக்கப்படும் பொருள் கடவுள் ஒருவனே. மக்களுக்குள் ளிருக்கிற அறிவு வேறுபாடுகள் பற்றிப் பல சமயங்கள் வேண்டப்படுவன ஆதலின் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு காலத்தில் அந்த அந்த நாட்டில் அந்த அந்தக்காலத்தில் வந்த ஒவ்வொரு பெரியாரால் உண்டாயிற்று. அவ்வாறு பெரியாரால் கூறப்பட்ட சமயங்களும் அவர் கூறிய படியுள்ள நிலையில் நிற்கவில்லை. அவைகள் காலஞ் செல்லச் செல்ல மலக்கலப்பால் தாழ்ந்த நிலையை அடைகின்றன. சமய உண்மைகள் தத்துவங்களில் வைத்து அறியப் படுவன ஆதலால் சமய அறிவு வேறுபாடுகளும் அந்த அந்தச் சமயத்தார் கொள்ளும் தத்துவங்களைப் பொறுத்தே உள்ளன. தூலதர தத்துவங்கள், தூல தத்துவங்கள், சூக்கும தத்துவங்கள், சூக்குமதர தத்துவங்கள், அதிசூக்கும தத்துவங்கள் எனத் தத்துவங்கள் ஒன்றுக்கொன்று நுண்மையில் ஏற்றமாயுள்ளவகையில் உள்ளன. தூலதர தத்துவங்களை மாத்திரம் ஒப்புக் கொள்கிற சமயத்தார் அவைகளில் விளங்குகிற உண்மைகளை அறிந்து ஒப்புக்கொள்வார்கள்; அவைகளுக்கு மேலுள்ள தத்துவங்களையும் அவைகளில் விளங்குகிற உண்மைகளையும் அவர்கள் அறியமாட்டார்கள்; ஒப்புக் கொள்ளவுமாட்டார்கள். தூல தத்துவங்களை ஒப்புக்கொள்கிற சமயத்தார் தூல தத்துவங்களை அறிந்து ஒப்புக் கொள்ளுதல் அன்றி அத் தத்துவங்களிலும் தூலமாயுள்ள தூல தர தத்துவங்களையும் அறிவார்கள். அவைகளில் விளங்குகிற உண்மைகளையும் அறிந்து ஒப்புக்கொள்வார்கள். இவ்வாறே மேலேயுள்ள சூக்கும தத்துவங்கள் முதலிய தத்துவங்களுக்கும் கொள்க. சமய சமரசம் எல்லாச் சமயங்களுக்கும் மேலான நிலையில் தூலதர தத்துவங்கள் முதல் அதிசூக்கும தத்துவங்கள் வரையுள்ள 36 தத்துவங்களையும் அறிந்து கூறுகிற சைவ சமயிகளுக்கு விளங்குமே அன்றி அத் தத்துவங்களுக்குக் கீழ் ஒவ்வொரு தத்துவ நிலையைக் கொள்கிற ஏனைய சமயிகளுக்கு நன்கு விளங்காது. ஏனைய சமயிகள் சமரசம்கொள்



ளினும் உலகப்பயன் (Policy) கருதிக் கொள்வார்களே அன்றி உண்மைபற்றிக் கொள்ளார்கள். சைவசமயமானது முப்பத்தாறு தத்துவங்களில் விளங்குகிற இயற்கை உண்மைகளைக் கூறுதல் அன்றி அவைகளைக் கடந்து நிற்கின்ற சமயாதீதப் பொருளாகிய கடவுளை 'மன்று வெளி'யிலே காட்டும். தத்துவப்படி முறைகளை அறிந்த சைவ சமயமானது பிற சமயங்களைத் தனது இளைய சகோதர சமயங்களாகப் பிணக்கின்றி நோக்குகின்றது. அதாவது சமரசப் பார்வையுடன் நோக்குகின்றது. தாழ்மையான தன்மையைக் குறியாக உடைய சைவசமயமானது பிற சமயப் படி முறைகளையும் தன்னுடைய உயர்ந்த நிலையையும் காட்டுதல் பெருமிதம் (Pride) பற்றி அன்று; பல சமய மக்களும் பல சமயப் படி முறைகளை உள்ளவாறு அறிந்து படிமுறை சென்று சென்றேறி முடிவில் தனது உயர்நிலையை அடைந்து உய்தற் பொருட்டு அவ்வாறு அது கூறுகின்றது. இப்படி அது கூறுதல், உலக மக்களுடைய உயிர் நலங்கருதிக்கூறும் உண்மைச் சமய சமரசம் ஆகும். சைவ சமயமானது அவ்வாறு கூறாமல் எல்லாச் சமயங்களும் ஒரே நிலையை- அல்லது சமமான நிலைகளை உடையன என்று ஓர் உயிரற்ற மட்டத்தில் (Dead level) வைத்துக் கூறுமானால் அக்கூற்று உண்மைக்கு மாறாயிருப்பதல்லாமல் மக்கள் சமயப் படி முறைகளில் ஏறி ஏறி மேலான சமயநிலை அடைதற்கு வழியில்லாமலும் போய்விடும். உண்மையான சமரசத்துக்கு உயிராய் விளங்குவது எல்லா மக்களுடைய உயிர் நலமே யாதலின் அவ்வாறு கூறுதல் உண்மைச் சமரசமும் ஆகாது.

## VIII. முடிவுரை

மேலே சமரசம் யாது என்பது பற்றியும் சமரச ஒழுக்கம் பற்றியும் நான் ஒருவாறு என் சிற்றறிவிற்கு எட்டிய அளவில்கூறினேன். சமரசம் என்பது சமமாக நினைத்தலும் சமமாகச் செயல் செய்தலும் அன்று என்றால், சமரசம் என்ற சொல்லின் முன் சமம் என்ற அடைமொழி வைத்தற்குக் காரணம் என்ன எனில் சமரசமானது மக்களுடைய இச்சை அறிவு செயல்கள் மூன்றில் இச்சையின் பாற்படுவது துவக்கத்தில் அறிவுக்குள் அடங்காமலிருக்கிற முருட்டு இச்சையே (Undeveloped feeling) திருந்திப் பின் அறிவின் வயப்பட்ட அன்பாய் (Love-emotion) மாறிப் பின் அந்த அன்பும் அழுந்திய அறிவான உணர்வு ஆகமாறுகிறது. அந்த உணர்வே சமரசம் என்னும் சொல்லாற் குறிக்கப்படுகிறது. அந்த உணர்வு ஆகிய சமரசமானது வேற்றுமையின்றி எல்லா மக்களும் நலம் அடைதல் வேண்டும் என்னும் அன்பும் மனக்கருத்தும் ஆகும். அம்மனக் கருத்தும் அன்பும் நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் முத்திறத்தாரிடத்தும் சமமாக இருத்தல் வேண்டும் என்பதுபற்றி அவை சமரசம் எனப்பட்டன. மேலே கூறியபடி எல்லா மக்களிடத்தும் கொண்டுள்ள நற்கருத்தும் அன்பும் சமமாயிருப்பினும் பயன் குறித்து நினைப்பும் செயலும் வேறுபட் டிருப்பனவாயுள்ளன. சமரச ஒழுக்கத்துக்கு மேலே கூறப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கிச்

சுருங்கக் கூறின் "ஒருவன் தனது திறன் அளவில் பிறருடைய உயிர் நலத்தேவையை அறிந்து உணர்ந்து அத்தேவைக்குத் தக்கவாறு நலம் செய்தல் சமரச ஒழுக்கம் ஆகும்" என்னுங் கட்டுரை (Definition) பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். மக்கள் ஒருவர்க்கொருவர் ஒழுகும் சமரச ஒழுக்கமுறை அவர்கள் ஏனைய கீழான உயிர்களிடத்தில் ஒழுகும் ஒழுக்கத்துக்கும் பொருந்தும்.

**அானருளால் அனைத்துயிரும் வாழ்க.**

---

# தென்புலத்தார்
# பிதிர்தேவர்களா அல்லது மக்கட் பகுதியினரா?

[ஆ. வே. முத்தையா முதலியார்]

தென்புலத்தார் யார்? என்ற கேள்விக்குத் திரு. மறைமலையடிகள் தமது முடிபைப் பேரவையில் தெரிவித்தது மகிழ்ச்சிக் குரியதே யாகும். பண்டைச்சாத்திரங்களெதுவேனும் ஒன்றுடன் இயைந்திராததோர் அபிப்பிராயத்தை நாத்திகம், உலோகாயதம் என்பதாக ஏளனஞ் செய்யு மிக்காலத்தில், தமது அறிவாராய்ச்சியின் முடிபை வெளிப்படுத்துவது காலத்தின் போக்கைக் குறிக்கும் அறிவின் நல்லாற்றலை மிளிரச்செய்கிறதன்றோ?

அதே முறையில்தான் "சித்தாந்த" பத்திரிகையை வாசித்துவரும் யானும் எனக் கெட்டியதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது முடிந்த முடிபு அல்ல வென்பதையும் அன்பர்கள் மறக்க வேண்டாம்.

இந்தியாவின் குமரிக்குத் தெற்கே பல்லாயிரம் மைல்கள் வரை நிலப் பரப்பு இருந்ததென்பதும், அந்நாடு எப்பெயரால் குறிப்பிடப் பட்டிருப்பினும் அதில் மக்கள் வதிந்திருந்தன ரென்பதும், பின்னர் கடல் கொண்டதென்பதும் அனேகமாக ஏந்துக் கொள்ளப் படுவனவன்றோ? இப்போது மறைந்துபோன அந்நில மக்கட் பகுதியினரே அப்போதைய ஏனைய மக்களுக்குப் பெரும் பெரும் இன்னல்களை விளைத்துவந்தவர்களைக் கொன்று காப்பாற்றியதும் வெவ்வேறு பெயர்களுடன் பழம் பழங்கதைகளில் குறிப்பாகக் காணப்படுகின்றன.

இதை முறையில் ஆராயப்புகின், அப்பெரு மக்களே தென்புலத்தாராவர். அவர்கள் பேருதவியால் உயிர் பெற்று வாழ்ந்த ஏனையோர்கள், அதிலும் முக்கியமாக நமது தென்னிந்தியர்கள், இவர்கள் பின் வந்தவர்கள் அன்னோரைத் தென்புலத்தோராக வழிபட்டார்கள். ஆனால் பின்னர் பல காரணங்களால் பல வடநாட்டு மக்கள் கலப்பால், வடநாட்டு மதங்கள் தென்னாட்டில் புகுந்த முதன் முதலிலேயே அத்தென்புலத்தோர்களெல்லாம் தெய்வங்களாக மாற்றப்பட்டு விண்ணுலகத்தில் அமர்த்தப்பட்டார்கள். "பழக்கம் கொடிது, அதை மாற்றுவது கஷ்டம்" என்னும் மனப்பாங்கு நியதியை யுணர்ந்த அப்போதைய சாத்வீக சீர்திருத்தக்காரர்கள், தெய்வங்களாக மாறிவிட்ட தென்புலத்தாரிடமாக இறந்தோர்களையும் தாய் தந்தையர்களையும் வைத்து இவர்களே தென்புலத்தார்கள்; இவர்களுக்குக் கடனாற்ற வேண்டுமென சமாதானமுண்டுபண்ணி யிருக்கலாமென எனது புத்திக்குப்படுகிறது. அற்றேல் பிதிர்க்களைப்பற்றியும் அவர்கள் உலகத்தைப் பற்றியும் வடநூல்களில் முதல் நூல்களாக விருப்பவைகளில் தெளிவாக ஒன்றும் சொல்லப்படாமையும், தென்னாட்டார் வழிபடு பழைய கடவுள்களெல்லாம் (இயற்கை உருவங்களாக வில்லாத விடத்தில்) தங்கள் மூதாதைகளைக் காப்பாற்றிய பெரியோர்களாகவே இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



ஆகவே தென்புலத்தா ரென்பது தென்னாட்டு மக்கள் பகுதியையே குறிக்கிறதென்றும் அவர்கள் முதன் முதலில் லெமூரியா முதலிய தென்னாட்டில் வதிந்த அக்காலத்துப்பேருபகாரிகளென்பதும் நாளடைவில் (எத்தனையோ ஆயிர ஆயிர ஆண்டுகளுக்கு முன்னரே) அவர்கள் தெய்வங்களாக மாற்றப்பட்டார்களென்பதும் அவர்களிடமாக இறந்தோரை வைத்து வழிபடும் பழக்கம் ஏற்பட்டிருக்கு மென்பதும் எனது சிற்றறிவிற் கெட்டிய முடிபாகும். பத்திராசிரியர் விருப்பத்திற் கிணங்கித் தாழ்மையுடன் இதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

# கண்டராதித்தர்

[இலக்கண விளக்க பரம்பரை - சோமசுந்தர தேசிகர்]

(௬௨-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை ஆக்கியோருடையது

சோழ அரசாட்சிக்கு உட்பட்ட நாடு தன் காலத்தில் மிகச் சுருங்கிய போதிலும் அந்நாட்டைச் சீரும் சிறப்புமாகக் கண்டராதித்தர் ஆண்டுவந்தார். அவர் போர்செய்வதிலும், பிறநாடுகளை வென்று அடிமைப்படுத்துவதிலும் மனங்கொள்ளவில்லை. அவ்வாறு கொள்ள நினைத்திருப்பாராயின் தொண்டைமண்டலத்தில் பிரவேசித்து அதனைத் தன்னதாக்கிக் கொண்ட இரட்ட அரசனை கிருஷ்ணனைச் சும்மாவிட்டிருக்கமாட்டார். இவரது ஆட்சி முடிந்த நாலைந்து ஆண்டுகட்குள் அக்கிருஷ்ணனை வெருட்டியடித்த இவரது இளவல்களான அரிஞ்சயன், உத்தமசீலி, அரிகுல கேசரியும், அரிஞ்செயன் புத்திரனை சுந்தரசோழனும் இல்லாமற்போகவில்லை. இவர்களெல்லாம் தமது மூத்தோரான கண்டராதித்ததேவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டே நடந்து வந்தனர். பாண்டிநாடு இச்சோழர்கட்குக் கீழ்ப்பட்ட நாடாக விருந்ததாயினும் கண்டராதித்தரது நற்குணத்தைக் கண்ட பாண்டி மன்னன் முரணத் தலைப்பட்டான். சோழரது பாதுகாப்பினின்று நீங்கியதுமன்றி எதிர்க்கவுந் தலைப்பட்டான். சோழநாட்டில் புகவாரம்பித்த பாண்டியனை யெதிர்க்க வேண்டியது கண்டராதித்தருக்கு அவசியமாயிற்று. அப்பாண்டியனுக்கு வீரபாண்டியனென்று பெயர். வீரபாண்டியனை யெதிர்க்கப் போர்க் கோலங் கொண்டு மேற்கு நோக்கிச் சென்றார்,

அப்போரிலே இவர் வீரசுவர்க்கம் பெற்றனர். அவ்வீரபாண்டியன் தன்னைச் 'சோழன் தலைகொண்ட' என்று கூறிக் கொள்கிறான். கண்டராதித்தரைக் கல்வெட்டொன்று 'மேற்கெழுந்தருளின தேவர்' என்று கூறுகிறது. இவ்வாறானது இவரது எட்டாமாண்டாகும். ஆகவே இவர் எட்டாண்டு அரசு செய்தவராவர்.

இவ்வெட்டாண்டிலும் தன் கீழ்ப்பட்ட குடிகளின் நன்மையைக் கருதி வேண்டுவனசெய்து வந்தார் என்றே கொள்ளக் கிடக்கின்றது. இவர் காலத்தில் பஞ்சம் முதலாய துன்பங்களின்றிக் குடிகள் நன்கு வாழ்ந்து வந்தனர். பொதுவாக நாடு க்ஷேமமாகவே யிருந்தது.

### கோயிற்றிருப்பணி

கண்டராதித்தருக்கு மும் முடிச் சோழனென்றொரு பட்டமுண்டு என்று திருவெண்காட்டுக் கல்வெட்டொன்றில் அறிகிறோம். இவருக்கு இளமையிலேயே வீரநாராயணியார் என்ற அம்மணியை மணஞ் செய்வித்திருந்தனர். அவளும் சிறந்த சிவபக்தியுடையவள். அவள் கண்டராதித்தரது பிதாவான பராந்தகப் பெருமானடிகள் இருக்குங் காலத்திலேயே சிவபதம் அடைந்து விட்டாள். பின்னர் காவிரிக்கு வடகரையிலுள்ள மழநாட்டு மழவரையன் மகளார் செம்பியன் மாதேவியாரை மணந்தார். இவ்வம்மணியாரிடமாக உத்தம சோழன், மதுராந்தகன் என்ற பெயர்களை வகித்த திருக்குமாரன் பிறந்த சின்னாளில் 'நம்பன்கழற் கீழமர்ந்தார்.'

அரசர், மாதேவியார், அரசிளங்குமரனை இவர்கள் செய்த திருப்பணிகள் அளவு கடந்தன. கண்டராதித்த தேவர் திருமழபாடிக்கு மேற்கில் ஒரு ஊரைப் பழம் பெயர் நீக்கிக்கண்ட ராதித்த சதுர்வேதிமங்கலமென அந்தணர்களுக்கு முந்நூட்டாகக் கொடுத்தார். அது இன்றும் கண்ட ராதித்தம் என்னும் பெயரால் வழங்கி வருகிறது. உப்புக்குப் பேர் போன மரக்காணம் என்ற ஊருக்குக் கண்ட ராதித்த நல்லூர் என்று பேரிடப்பட்டிருக்கிறது. இவர் ஆட்சியிலே தான் 'நீரால் விளக்கிட்டமை நீணாடறியுமென்றே' என்றும் மற்றும் பல விதமாகவும் அப்பர் சுவாமிகளால் புகழப்பட்ட தண்டியடிகள் நாயனார் திருவிளக்கேற்றின திருவாரூர் அரநெறி முன்மண்டபம் முதலியன கட்டப்பட்டன. கோனேரி இராஜபுரம் என்று இதுபொழுது வழங்கும் திருநல்லம் முழுவதும் திருப்பணி செய்யப்பட்டு வேண்டும் நிவந்தங்களும் வைக்கப்பட்டன.

இவரது இராணியார் செய்த திருப்பணிகளும் ஆலயங்களுக்கு இட்ட திருவாபரண முதலானவைகளும் பல. வடகுறங்காடு துறை, திருமணஞ்சேரி இரண்டும் கற்றளியாகக் கட்டப்பட்டன. திருமுதுகுன்றமான விருத்தாசலத்தில் கோபுரம், ஸ்நபனமண்டபம், பல சுற்றுக் கோயில்கள் கட்டினாள். தன் பெயரால் திருநாகைக்காரோணத்துக்கு அணித்தான திருத்தேவூருக்குச்சமீபமாக **செம்பியன்மாதேவி** என ஒரு ஊர் நிர்மாணித்துத் திருக்கோயிலும் கட்டினாள். இவ்வம்மணியார் திருக்கோயில்களுக்கு வைத்த உடைக்கலத்தட்டு முட்டுக்களும் இட்ட ஆபரணங்களும் எண்ணிறந்தன. இவ்வம்மையாரால் இடப்பெறாத திருக்கோயில்களே இல்லையென்று சொல்லலாம்.



இவரது மகனான மதுராந்தக உத்தமச் சோழனும் செய்தபணிகள் பல. வடக்கே திருஒற்றியூர் முதல் தெற்கே திருநெல்வேலி வரை இவ்வரசனது ஆதரவுபெறாத திருக்கோயில்களில்லை. இவர்களையன்றிக் கண்டராதித்தனார் பிதாவான பராந்தகதேவரும் செய்த திருப்பணிகள்பல. அதனை நமது அடியாரும் தமது திருவிசைப்பாப் பதிகத்தில்,

"வெங்கோல் வேந்தன் றென்னாடு
மீழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
வங்கோல் வளையார் பாடியாடு
மணிதில்லை யம்பலத்து
ளெங்கோனீ சனெம் மிறையை
யென்று கொலெய்துவதே"

என்று குறித்துள்ளார். பராந்தகன் பொன்னம்பலத்தைச் செம்பொன்னணிந்த செய்தி திருவாலங் காட்டினின்றும் கிடைத்த செப்புப் பட்டயத்தாலும் உறுதி பெறுகிறது. ஆகவே கண்டராதித்த தேவரது முன்னோரும் பின்னோரும் செய்த பணிகளும் பிறவும் பலவாம்.

---

# வினா வெண்பா விளக்கக் குறிப்பு

[தமிழ்ப் பண்டிதர் - வ. மு. இரத்திநேசுவரையர்]

சைவ சித்தாந்தப் பெருநூல்கள் பதினான்கனுள்ளே ஒன்றாகிய வினா வெண்பாவின் சாரத்தை இங்கே சுருக்கிக் காட்டுவோம். இவ்வினா வெண்பா என்ற அரு நூலானது கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளியதாகும். சமயாசாரியர் சந்தானாசாரியர் என்ற பாகுபாடுடைய செந்நெறிச் சிவனடியார்கள் அருளுருவாய் அவதரித்துக் காட்டி யருளிய ஒழுக்கங்களும், அரிய நூல்களும் சைவ மக்கள் உய்வகை காட்டும் பெற்றியன. ஆனால், இக்காலத்து ஆராய்ச்சியாளர் சிலர், ஒவ்வொன்றிலும் பற்பல சந்தேகங்களும் புதுக் கற்பனைகளுஞ் சாற்றுவர். அவற்றைப்பற்றி இங்கே யாதும் கூ[illegible] நூற்கருத்தையேவிளக்குவாம். பத[illegible]ரையும், பொழிப்புரையும் இங்கே காட்டப்படமாட்டா.

பாசத்தாற் பிணிப்புண்ட ஆன்மாக்கள் பதியாகிய சிவபிரானைக் காணமாட்டா. சூரியனின் பேரொளியை அந்தகர் காணமுடியாமைபோல என்பது. மலம் ஆன்மாக்களை மறைத்திருக்கும்போதும் சிவம் அம்மலத்தாற்றான் கட்டுண்ணாது உடனாகி நிற்பர்.

"அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்"

(சிவ. போ)

நீடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூடலரிது கொடுவினையேன்—பாடிதன்முன்
ஒன்ற, வார்சோலை யுயர்மருதச் சம்பந்தா!
நின்றவா றெவ்வாறு நீ. 1

சிவத்தின் திருவருளால், ஆன்மாக்கள் பயன[illegible]வது எப்படியென்றால், ஆண[illegible]மலமீடாகவுள்ள கேவலாவத்தையினு[illegible], கலாதிகளைப் பொருந்தி மலமகலாச் சகலாவத்தையினும், திருவருளைச் சாதாரண பயனாகவும், சுத்தாவத்தையிற் பெரும் பிரயோசனமாயிருக்கின்றதாகவும் ஆன்மாக்களறியக் கூடும் என்றுரைக்க,

" காட்டிடுங் கரண மொன்றுமில்லையேற்
காணுதாம் " (சிவ-பிர)

சிவபிரான், அதிட்டான பக்கமாகவும், ஆவேச பக்கமாகவும் நின்றருளுவார்.

இருளி லொளிபுரையு மெய்துங் கலாதி
மருளி னிலையருளு மானும்—கருவியிவை
நீங்கி னிருளா நிறைமருதச் சம்பந்தா !
ஈங்கு னருளா லென்பெற. 2

ஆன்ம ஞாநம் சிவஞாநமாகாது. தத்துவ தாத்துவிகங்களை நேதிகளைந்து உண்மை காண்டலே சிவஞான நிலையாகும். ஒருவித வேற்றுமையுமின்றி ஞானமுகிழ்ப்பான் விளங்குதலேசுத்தமாகும்.

" தத்துவ மானவற்றின்
தன்மைகள் உணருங்காலை
உய்த்தறிந் திடவுதிப்ப
தொளிவளர் ஞானமாகும்
அத்தன்மை யறியுமாறு மகன்றிட
வதுவா யான்மாச்
சுத்தமாஞ் சுத்த ஞானத்
தொருமுதல் தோன்றுமன்றே "
(சிவ - பிர - 73)

சிவன்சீவ னென்றிரண்டுஞ்
சித்தொன்று மென்னிற்
சிவனருட் சித்திவ னருளைச்
சேருஞ் சித்து"
(சிவ-சித்தி)

புல்லறிவு நல்லுணர்வ தாகா பொதுஞான
மல்லவில துள்ளதெனி லங்கியமாம்--தொல்லை
ஊனமலையாவா றுயர்மருதச்சம்பந்தா! [யிருள்
ஞானமலை யாவரய் நவில். 3

சுத்த தத்துவங்களைக் கொண்டே ஆன்மா அறியவேண்டும். ஆன்மாவினறிவு விளங்கக் கலை வித்தைகள் தத்தந் தொழிலை ஆற்றவேண்டும்.

" இத்தகைமை யிறையருளா
லுயிரறியு மறிவுக் கீடாக" (சிவ - பிர)

கனவுகன வென்று காண்பரிதாங் காணில்
நனவி லவைசிறிது நண்ணு—முனைவனருள்
தானவற்றி லென்று தடமருதச் சம்பந்தா!
யானவத்தை காணுமா றென். 4

கண்ணானது இருளுடன் கூடி இருளாயும், ஒளியோடு கூடி ஒளியாயும் நிற்றல் போல, ஆன்மாக்கள் பாசத்துடன் கூடிப் பாசமாயும், அருளோடு கூடிப் பாசநீக்கம் பெற்றவழி அருளாயும் நிற்கும். ஆத்மா சதசத்தென்பது இதனாலேயாம்.

" சத்திது வென்றசத்துத் தானறியாத
சத்தைச், சத்தறிந்தகலவேண்டா "
(சிவ - பிர)

"அறிவறிந்த தெல்லா மசத்தாகு மாயின்
குறியிறந்த நின்னுணர்விற் கூடா—பொறி
தாமாவறியா தடமருதச் சம்பந்தா [புலன்கள்
யாமா றறிவா ரினி " 5

ஆன்மாக்களுக்குச் சிற்றறிவு இயற்கையென்றால், பேரின்புகூடல் எப்படியெனில், அச் சிற்றறிவு கெடாதும், இருந்ததாகாதும் பாசம் நீங்கியவழித் திருவடியிலே கலந்து ஆன்மா இருக்கும் என்க.

" செம்பிரதக் குளிகையினாற் களிம்பற்றுப்
பொன்னாய்ச் செம்பொனுடன்சேருமலஞ்
சிதைந்தாற் சீவன், நம்பனுடன்
கூடுமெனிற் பொன்போலல்லன்"
(சிவ-சித்தி)

சிற்றறிவு முற்சிதையிற்
சேர்வாரின் றுஞ்சிறிது
மற்றதனி னிற்கிலருள்
மன்னுவாம்—துற்றமுகில்
மின்கொண்ட சோலை
வியன்மருதச் சம்பந்தா !
என் கொண்டு
காண்பே னியான். 6

பசுகரணங்கள் சிவகரணமாய் ஆன்மாவும் அருளாய்ப் பொருந்தி நின்று இறைவனை யறியும். மாயை கன்மங்



களுடன் கூடிய ஆன்மாவுக்குச் சிவ ஞானம் வெளிப்படாது என்பது,

" மாயை மாமாயை மாயா வருமிரு
வினையின் வாய்மை " (சிவ - பிர)

உன்னரிய நின்னுணர்வ
தோங்கியக்கா லொண்கருவி
தன்னளவு நண்ணரிது
தானாகும்—என்னுணர்வு
தானறிய வாரா தடமருதச் சம்பந்தா
யாமறிவ தெவ்வா றினி. 7

இறைவன் இருவினையொப்பும் மலபரிபாகமு மடைந்த ஆன்மாவுக்கு ஞானத் திருமேனி கொண்டருளுவார்.

" மாயைதான் மலத்தைப்பற்றி
வருவதோர் வடிவமாகும்
* * * *
நாயகனெல்லா ஞானத் தொழின்
முத னண்ணலாலே." (சிவ-சித்)

அருவே லுருவன் றுருவே லருவன் (று)
இருவேறு மொன்றிற் கிசையா-வுருவோரில்
காணி லுயர்கடந்தைச் சம்பந்தா! கண்டவுடற்
பூணுமிறைக் கென்னும் புகல். 8

இரண்டு மலமுடையார்க்கு மாயையாலாகிய உடல் இல்லை. வினைப் புசிப்பு எப்படியெனில், சுத்த மாயையிலே, விஞ்ஞானகலர் பிரளயா கலர்க்குத் தேகமுண்டு என்க.

" வித்தைகளவித்தை யீசர் சதாசிவ
ரென்றிவர்க்கு வைத்துறும்
பதங்கள் வன்னம் புவனங்கள்
மந்திரங்கள் தத்துவஞ் சரீரம் "

" இருமலத்தார்க் கில்லை
யுடல்வினை யென்செய்யும்
ஒருமலத்தார்க் காரா
யுரைப்பேன்—திரிமலத்தார்
ஒன்றாக வுள்ளா ருயர்மருதச்
சம்பந்தா வன்றாகிலாமா றருள் " 9

ஆணவ மலத்தைப் பொருந்திய ஆன்மா அதன் மயமாதல்போல சிவ ஞானம் பற்றிய ஆன்மா சிவமயமாகித் திகழும்.

" ஒன்றிரண்டாகி யொன்றி
யொருமையா மிருமையாகி "
(சிவ-பிர)

" ஒன்றிரண்டாய் நின்றொன்றி
லோர்மையதா மொன்றாக
நின்றிரண்டா மென்னிலுயிர்
நோருகுந்—துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச்
சம்பந்தா ; யானாகி
யோங்கியவா றெவ்வா றுரை " 10

ஆன்மா அத்துவித முத்திகூடுதற்கு ஞாதுரு ஞான ஞேயங்களைச் சங்கற்பியாது விட்டு ஒன்றாகிச் சிவபிரானுணர்வானெய்தும் மெய்ஞ்ஞானம்பெறுதல் வேண்டும்.

" சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள்
தாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள் பலவுங்
கீழாக மேலாம்
பதிபசு பாசந்தெரித்துப்
பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி"
(சிவ-சித்தி)

காண்பானுங் காட்டுவதுங்
காண்பதுவு நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி
காணார்கள்—காண்பானும்
காட்டுவதுங் காண்பதுவுந்
தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாராதவர். 11

சிவபிரானே திருவருள் பாலிக்க ஆன்மாச் செவ்விய ஞானம் பெற வேண்டும். அச்சிவபிரானே வியாபகமும் முழு முதன்மையுமுடையர். ஆன்மா தன் வயமில்லாமையால், அப் பெரு முதல்வன் போகங்களைப் புசிக்கும்படி ஆன்மாவுக்குக்கருணை பாலிக்க வேண்டும்.

"ஈண்டிவ் வான்மாக்கள் அவனையன்றி
யமைந்து ஒன்றையும்
விஷயியா வாகலான் அவனும்
அவற்றது விஷயத்தை யுணரும்"
(சிவஞா-போ)

ஒன்றினுகர்வதிவ னூணு முறுதொழிலு
மென்று மிடையி விடமில்லை—ஒன்றித்
தெரியா வருண்மருதச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு. 12

ஞான மிகுதி யுடையோருக்குச்சிவ பிரானியல்பும், மேற்கூறிய உண்மைப் பொருள்களும் சத்தியமாகத் தோன்றும். ஏனையோர் எத்தனை சாத்திரம் படித்தாலும், இவ்வினு வெண்பாக் கருத்தைப் பாராதிருப்பின், ஊமன் கனவினிலே பால் குடித்ததுபோல் ஒன்றுந் தெரியாதுஎன்று அருளியமை சிந்தித்து வந்திக்கற் பாலதம்.

அருளா லுணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா
வினுவெண்பா வுண்மை வினுவாரே லூமன்
கனவின்பா லெய்துவிக்குங் காண். 13

சுபம்

# தேவாரம்

[ச. சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L. T.,]

**சை**வ சமயாசாரியர் நால்வருள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் மூவர் அருளிச் செய்த திருப்பதிகங்களின் தொகுதிக்குத் "தேவாரம்" என்று பெயர். **தேவாரம்** என்னுஞ் சொல்லுக்கு (1) தெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது; (2) அப்பாட்டினிடத்தும் அதையோதும் அடியாரிடத்தும் தெய்வத்துக்கு இன்பத்தை விளைவிப்பது; (3) சிவபெருமானுக்கே உரிமையுடையது; (4) தெய்வத் தன்மை பொருந்திய பாமாலையாவது என்பன போன்ற பல பொருள்கள் கூறுவர் கற்றோர். 'தமிழ் வேதம்', 'தமிழ் மறை', 'அடங்கன் முறை' என்னும் வேறு பெயர்களும் தேவாரத்திற்குண்டு. இத்திருப் பதிகங்கள் சைவத் திருமுறைகள் 12-ல் முதல் ஏழு திருமுறைகளா யமைந்துள்ளன. ஆதியில் ஏற்பட்ட தேவாரத் திருப்பதிகங்களின் தொகை லக்ஷத்து மூவாயிரம். (பதிகம் = 10 பாடல் கொண்டதொரு பிரிவு.) இற்றைக்குச் சுமார் 950 ஆண்டுகட்கு முன்பு, திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அனுக்கிரகம் பெற்ற நம்பியாண்டார் நம்பிகளைத் துணைக்கொண்டு இராஜ இராஜ அபயகுலசேகர சோழர் ஸ்ரீ சிதம்பர தலத்தில் கண்டெடுத்த தேவாரப் பதிகங்களின் தொகை 795. மற்றவை திருவருட் சம்மதப்படி மறைந்து போயின.

இத் திருப்பதிகங்கள், சிவனோடு ஒற்றித்து நின்ற சிவாநுபூதிப் பெருஞ் செல்வர்கள் திருவருணெறியில் நின்று உலகுய்யப் பாடிய பாக்களாம்; வெறும் புலவர் பாட்டல்ல. இவற்றில், வடமொழி நான்மறைகளைப் பற்றிக் கூறத்தக்க சிறப்புகளும், தமக்கே உரிய பெருநலங்களும் ஒருங்கே அமைந்துள்ளன என்பது இருமொழியும் உணர்ந்த பெரியார் துணிபு. ஆகையால் சைவர்கள் தேவாராதி திருமுறைகளைப் பெறற்கரிய பெருஞ் செல்வமென்று பேணிப் பயனடையும் கடமையும்

187153